**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகர்**

**அ.வ.எண்.201/2023**

நாள் : 11.08.2026

பி.வா.சா.1 – நந்தகோபால்

**வாதி தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

உங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் கோருரிமைக்கு வாதி தரப்பில் Reply statement தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றுசொன்னால் – சரிதான். ஏ செட்யூல் சொத்து உங்களது தாத்தா சொக்கையாகோனாருக்கு பாத்தியப்பட்டது என்றுசொன்னால் – சரிதான். ஏ செட்யூல் சொத்துக்களை உங்களது அப்பா கணேசன் உங்களது தாயார் பராசக்திக்கு 29.08.2018 ம் தேதி தானசெட்டில்மென்ட் பத்திர ஆவண எண் 2277/2018 மூலம் பாத்தியப்படுத்தினார் என்றுசொன்னால் – சரிதான். அந்த பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாதி தரப்பில் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றுசொன்னால் – சரிதான். அந்த தானசெட்டில்மென்ட் பத்திரத்தின் அசல் உங்களிடம்தான் உள்ளது என்றுசொன்னால் – சரிதான். அந்த அசல் ஆவணத்தை நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் – சரிதான். உங்கள் சகோதரி செல்வலட்சுமி, உங்களது சகோதரர் சொக்கலிங்கம், உங்கள் மீது விருதுநகர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.69/2019 பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் – சரிதான். உங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் கோருரிமையில் என்ன பரிகாரம் கேட்டுள்ளீர்கள் என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் – தெரியும். உங்களது தகப்பனார் மற்றும் தாயார் பட்ட கடன்களை அடைப்பதற்கு வாதிக்கு 3ல் 1 பங்கு உரிமையுள்ளது அதன் அடிப்படையில் தாவா சொத்துக்களில் 1/3 பங்கு வாதிக்கு கொடுப்பதற்கு உங்களுக்கு ஆட்சேபணை இல்லையா என்றால் எனது அக்காவிற்கு ஏற்கனவே சொத்து கொடுத்துள்ளார்கள். அதனை

கழித்துக்கொண்டு பாகம் தர தயாராகவே இருக்கிறேன். மேலும் Five Star Bank ல் உள்ள ரூ.4,50,000/ கடனை அடைத்துள்ளேன் அதனையும் அனுசரித்து பாகம் கொடுப்பதற்கு தயாராகவே இருக்கிறேன். நீங்கள் உங்களுடைய எதிர்வழக்குரை 2 வது பக்கத்தில் 4 வது பாராவில் "வாதி தனது பாகத்திற்காக தனது தாயாரிடமிருந்து தானசெட்டில்மென்ட் வாயிலாக வீடு பெற்றுள்ளதாக சொல்லியிருக்கிறேன்" என்றுசொன்னால் – சரிதான். அந்த வீடு எது என்று உங்களுக்கு குறிப்பிட்டு தெரியுமா என்றால் – குருசாமி தெரு, ரோசல்பட்டி பஞ்சாயத்தில் உள்ள வீடு ஆகும். அந்த ரோசல்பட்டியில் உள்ள வீட்டை உங்களது எதிர்கோருரிமை மனுவில் காண்பிக்கவில்லை என்றுசொன்னால் – நான் சொத்துவிவரத்தில் காண்பிக்கவில்லை. ஏனென்றால் எனது அம்மா வாதிக்கு ஏற்கனவே அதனை தானசெட்டில்மென்ட் கொடுத்துவிட்டதால் காண்பிக்கவில்லை. வாசகங்களில் அது சம்மந்தமாக சொல்லியுள்ளேன், ஆவணமாகவும் தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாதி அவருடைய பாகத்திற்கு சொத்தை வாங்கினார் என்று சொல்லவில்லை என்றுசொன்னால் – சரிதான். சொத்துக்கள் எனது அம்மாவிற்கு பாத்தியப்பட்டது என்பதனால்தான் அதில் ஒன்றை வாதிக்க கொடுத்துள்ளார். அதேபோல் மகன்களான எங்களுக்கும் சொத்து வரவேண்டும். எனவே தானசெட்டில்மென்ட் உள்ள சொத்தை கழித்துக்கொண்டு மற்றவற்றை பாகம் கொடுக்க தயாராகவே இருக்கிறேன். அந்த பி.வா.சா.ஆ.1 தானசெட்டில்மென்ட் பத்திரத்தில் வாதியின் மீதுள்ள அன்பினாலும், பாசத்தினாலும் தனக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட சொத்தை தானம் கொடுப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றுசொன்னால் –சரிதான். எனவே இவ்வழக்கு பகுதி பாகப்பிரிவினை தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றுசொன்னால் – சரியல்ல. உங்கள் எதிர்கோருரிமை கோரிக்கையில் உங்களது தகப்பனார் கணேசன் வாதிக்காக சில சொத்துக்களை விற்றும், அடமானம் செய்தும் வாதிக்கு பணம் கொடுத்தார்

என்று சொல்லியுள்ளேன் என்றால் – சரிதான். எந்த எந்த சொத்துக்களை விற்பனை செய்து வாதிக்கு எவ்வளவு பணம் கொடுத்தார் என்பதனை நிருபிக்கும் விதமாக உங்கள் தரப்பில் நீங்கள் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் – சரிதான். ஒத்திக்கு விட்டதற்கு பணம் கொடுத்தால்தான் அந்த ஆவணத்தை திருப்பி தருவார்கள். நீங்கள் கூடுதல் சாட்சி மூலம் அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தயாராக இருக்கிறீர்களா என்றால் – ஒத்திபணத்தை கொடுத்தால்தான் அந்த அடமான பத்திரத்தை ஒத்திதாரரிடமிருந்து வாங்க இயலும். பி.வா.சா.ஆ–3 ஆவணத்தில் உள்ள சொத்துவிவரத்தில் கண்டுள்ள அதாவது பிராதில் 5 வது இலக்க சொத்தை உங்களது அம்மா பராசக்திதான் ரூ.4,50,000/– அடமானம் வைத்துள்ளார் என்றுசொன்னால் – சரிதான். அந்த பணத்தில் ரூ.3,50,000/– எங்களது அக்காவிற்குதான் கொடுத்தார். அதற்கு ஆவணம் தாக்கல் செய்துளளேன். மீதமுள்ள பணத்தை அவர்கள் மருத்துவ செலவுக்கு வைத்துக்கொண்டார்கள். Five Star finance–ல் வைத்துள்ள உங்கள் தாயார் பராசக்தி, உங்களது தகப்பனார் கணேசன், நீங்கள், உங்களது மனைவி ஆகியோர் கையொப்பம் செய்துள்ளீர்கள் என்றுசொன்னால் – சரிதான். வாதியிடம் கையொப்பம் Finance –ல் கேட்கவில்லை. மேற்கண்ட Finance –ல் வைத்த கடன் சம்மந்தமாக அடமானப்பத்திரம் வா.சா.ஆ.12 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றுசொன்னால் – சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ரசீதுகளில் வாதியின் மகன் கதிர்வேல் மேற்கண்ட Five Star finance–ல் பணம் செலுத்தியதாக கையொப்பம் உள்ளது என்றுசொன்னால் – சரிதான். அந்த பணத்தை எனது அம்மா, அப்பா மற்றும் நான் கொடுத்து அனுப்பினால் அவர் செலுத்தி வருவார். மேற்கண்ட பணம் செலுத்தியதற்கான கதிர்வேல் பெயரிலான ரசீதுகள் **வா.சா.ஆ.13** (வரிசைகள் 10) மேற்கண்ட Five Star finance–ல் செலுத்தப்பட்ட உங்கள் எதிர்கோருரிமையில் குறிப்பிடப்பட்ட ரூ.3,60,000/– பணம் போக

மீதமுள்ள ரூபாயில் ரூ.50,000/- வீட்டின் பராமரிப்பு செலவிற்கும், ரூ.30,000/- உங்களது தகப்பனாரின் ஈமகிரிகைக்கும் செலவழிக்கப்பட்டது என்றுசொன்னால் - அது தவறு. எனது தகப்பனார் மூன்று வருடத்திற்கு முன்புதான் இறந்தார். எனது தாயார் லோன் பெற்றவுடனயே இறந்துவிட்டார். உங்களது தரப்பில் வாதியின் மகன் கதிர்வேல் தொகை செலுத்தியதற்கு பில்கள் உள்ளது போல் நீங்கள் செலுத்தியதற்கு பில்கள் உள்ளதா என்றால் - பில்களை நான் பத்திரமாக வைத்துள்ளேன். *வாதி தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.*

திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**/Sd/ S.K.Angalaeswari**
கூடுதல் மாவட்ட நீதிபதி,
விருதுநகர்.